

தலைமைச் செயலகத்தில் நேற்று (27.03.2025) அமைச்சர் பி. கீதா ஜீவன் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மானியக் கோரிக்கை மற்றும் துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜெயஸ்ரீ முரளிதரன், ஜானி டாம் வர்கீஸ், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறையின் அலுவலர்கள், அத்துறையின் கீழ் பணிபுரியும் அனைத்து மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை குடிநீர் வாரிய கட்டணங்களை

# விடுமுறை நாட்களிலும் செலுத்தலாம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை,மார்ச்.28-

சென்னை குடிநீர் வாரியத்திற்கு பொதுமக்கள் செலுத்த வேண்டிய குடிநீர் / கழிவுநீரகற்று வரி, கட்டணங்கள் மற்றும் நிலுவை தொகையினை மார்ச் மாதம் 31ஆம் தேதிக்குள் செலுத்திட வேண்டும்.

வரி செலுத்துவதற்கு ஏதுவாக அனைத்து பகுதி அலுவலகங்கள் / பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் இயங்கும் வசூல் மையங்கள் அனைத்து அரசு விடுமுறை நாட்களான சனிக்கிழமை (29.03.2025), ஞாயிற்றுக்கிழமை (30.03.2025), மற்றும் திங்கட்கிழமை (31.03.2025) அன்றும் இயங்கும்.

மேலும், நுகர்வோர்கள் https://bnc.chennaimetrowater.in/#/public/cuslogin என்ற வலைதளத்தைப் பயன்படுத்தி கிரெடிட் கார்டு (Credit Card), டெபிட் கார்டு (Debit Card) மற்றும் நெட் பேங்கிங் (Net Banking) மூலமாக செலுத்தலாம். இ-சேவை மையங்கள், UPI, வசூல் மையங்களில் உள்ள QR குறியீடு மற்றும் iPoS போன்ற பிற கட்டண முறைகளையும் பயன்படுத்தி நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீரகற்று வரி மற்றும் கட்டணங்களை செலுத்தலாம்.

எனவே, நுகர்வோர்கள் 31.03.2025 க்குள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் மற்றும் கட்டணங்களை உடனடியாக செலுத்தி சென்னை குடிநீர் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஒத்துழைக்குமாறு குடிநீர் வாரியம் கேட்டுக்கொள்கிறது.



தலைமைச் செயலகத்தில் நேற்று (27.03.2025) அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் கலை பண்பாட்டு, அருங்காட்சியகங்கள் ஆகிய துறைகளின் சார்பில் சட்டமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கொள்கை விளக்கக் குறிப்புகள் மற்றும் வெளியிடப்பட வேண்டிய அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் க.மணிவாசன், வாகை சந்திரசேகர், கவிதா ராமு, சே.ரா.காந்தி, விஜயா தாயன்பன், ஜெ.ஜெயலலிதா முனைவர் சீ.சௌமியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விளையாட்டை விளையாட்டாகப் பார்த்த காலம் போய்விட்டது – துணை முதல்வர் பொறுப்பேற்றதால்

# இளைஞர்கள் விளையாட்டை வாழ்க்கையின் நம்பிக்கையாகப் பார்க்கிறார்கள்!

## சட்டப்பேரவையில் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில் எழும்பூர் தொகுதி இ.பரந்தாமன் பேச்சு

**சென்னை, மார்ச் 28 -**

**சட்டப்பேரவையில் நேற்று, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் எழும்பூர் தொகுதி உறுப்பினர் இ.பரந்தாமன் பேசுகையில் விளையாட்டை விளையாட்டாக பார்த்த காலம் போய் விட்டது, துணை முதல்வர் பொறுப்பேற்றதால் இன்று இளைஞர்கள் விளையாட்டை வாழ்க்கையின் நம்பிக்கையாகப் பார்க்கிறார்கள் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் எழும்பூர் தொகுதி உறுப்பினர் இ.பரந்தாமன் பேசியதாவது:

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கொள்கை வாரிசாக, இந்தியாவின் திசை வழியைத் தீர்மானிக்கும் பேராற்றல்மிக்க கழகத் தலைவராக திராவிட நாயகர் முதலமைச்சர் அவர்கள் அமர்ந்துள்ள இந்த அவையில், இந்த இயக்கத்தின் எதிர்கால வரலாற்றை எழுதவிருக்கின்ற துணை முதலமைச்சர் அவர்களுடைய துறைகள் சார்ந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்கின்ற வாய்ப்பினை வழங்கியமைக்காக முதற்கண் என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சிலர் டெல்லிக்கு படையெடுக்கிறார்கள்!**

அவை முன்னவர் உள்ளிட்ட மூத்த அமைச்சர்களுக்கும், அவையோருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இந்தியாவின் வரலாறு தெற்கிலிருந்து எழுதப்பட வேண்டும் என்று சொன்னவர் நம் முதலமைச்சர் அவர்கள். அவ்வகையில் பல மாநில முதலமைச்சர்களையும் ஒருங்கிணைத்து மாநில உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கூட்டம் நடத்தி டெல்லியையே திரும்பிப் பார்க்கச் செய்தவர் நம் முதல்வர் அவர்கள். ஆனால், ஒருசிலரோ டெல்லிக்கு படையெடுத்துச் செல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என் மீதான விமர்சனங்களை எனது செயலால் எதிர்கொள்வேன் எனத் தன்மீது களங்கம் கற்பிக்க முனைந்தவர்களுக்கெல்லாம் பதிலடி தந்தவர் நமது துணை முதலமைச்சர் அவர்கள். அவரது சீரிய தலைமையில் இயங்கிவரும் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் கழகத்தின் எதிரிகளைத் தவிடு பொடியாக்கி வருகின்றன.

எல்லோருக்கும் எல்லாமும் என்ற உன்னத திட்டத்தை செயல்படுத்தும் துறைதான் இந்த வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. எல்லோருக்கும் எல்லாமும் மற்றும் எவரும் விடுபடா வண்ணம் வளர்ச்சியைக் கொண்டு செல்வதே இந்தத் துறையின் இலக்கு.

மாநிலத்தின் எல்லா வளர்ச்சித் திட்டங்களிலும், மிகவும் பாதிக்கக்கூடியவர்களும் மற்றும் கடைக்கோடியில் உள்ள குடிமக்களும் இணைக்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் துறைதான் இந்தத் துறை. மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள், ஐந்தாண்டு திட்டங்கள் தயாரித்தல், மாநில திட்டச் செலவினங்கள், ஒன்றிய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைக் கண்காணித்தல் ஆகிய பணிகளுடன் ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்புடன் மாநிலத்தின் ஒருங்கிணைந்த துறையாகவும் இருந்து மாநிலத்தின் நீடித்த வளர்ச்சி *sustainable growth*, வறுமை ஒழிப்பு ஆகிய இலக்குகளை முதன்மையான நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வரும் துறை இந்தத் துறை. பல்வேறு துறைகளிட மிருந்து வரப்பெறும் புதுமையான திட்டங்களை ஆராய்ந்திடவும் மற்றும் முன்னுரிமை அளித்து அரசின் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொண்டுவருவதும், இந்த திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நோக்கமாகும். இந்த திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்மூலமாக தமிழ்நாட்டு திராவிட நாயகன் செய்துவரும் சாதனைகளின் பட்டியலில் விடியல் பயணம், இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், தமிழ்நாடு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், எண்ணும் எழுத்தும், மெட்ரோ இரயில் திட்டம் என்று பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மெட்ரோ ரயில் திட்டம்!**

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வரும் மெட்ரோ இரயில் திட்ட ங்களிலேயே மிகப் பெரிய திட்டமாக, 63,746 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 119 கி.மீ. தொலைவிற்கு 3 வழித்தடங்களில் மெட்ரோ இரயில் பாதை திட்டம் சிறப்புற நடைபெற்று வருகிறது. இவ்வாறான பல முக்கிய திட்டங்களைத் தயாரித்தும், கண்காணித்தும் நடைமுறைப்படுத்தி வருகிறார் நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள்.

அந்த வகையில், எனது எழும்பூர் தொகுதியில் கடந்த 4—2-2025 அன்று சென்னை மெட்ரோ இரயில் பகுதியில் உள்ள மத்திய சதுக்க வளாகத்தில், சென்னை மெட்ரோ இரயிலுக்குச் சொந்தமான வேளாண்மை நிறுவனத்தின் சார்பில், 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தரைதளம் மற்றும் 27 அடுக்குமாடிகள் கொண்ட *Central Tower* அமைக்கப்படவிருப்பதை அடிக்கல் நாட்டியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அவருக்கு என்னுடைய தொகுதி மக்கள் பெருமைக்குரியவர்களாக இருக்கிறார்கள்.

அடுத்து சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. இந்தத் துறை என்பது திராவிட மாடல் அரசின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் சூத்திரமான துறை என்று சொல்லலாம். சட்டப் பேரவையில் ஆளுநர் வெளியிடுகின்ற அறிவிப்புகள், பொது நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை அறிக்கையில் வரக்கூடிய அறிவிப்புகள், முதலமைச்சர் அவர்கள் 110 விதியின்கீழ் கொடுக்கிற அறிவிப்புகள், முதலமைச்சர் அவர்கள் வெளி மாவட்டங்களுக்கு ஆய்வு மேற்கொள்கிற போது விடுகின்ற அறிவிப்புகள், அரசு விழாக்களில் கொடுக்கின்ற அறிவிப்புகள், அமைச்சர் பெருமக்கள் தங்களுடைய துறையின்மீது கொடுக்கின்ற அறிவிப்புகள் என இவை எல்லாவற்றையும் செயலாக்கம் செய்வதற்கும், நிறைவேற்றுவதற்கும், கண்காணிப்பதற்கும் இந்த சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என்பது ஒரு முக்கியப் பங்காற்றுகிறது.



அந்த வகையில் சிறப்பு முன்னெடுப்புகள், முத்திரைத் திட்டங்கள், சாலைகள் மற்றும் பாலங்கள், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், வட சென்னை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு முதலமை ச்சரின் புத்தாய்வுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், திறன் பயிற்சிகள், கலைஞர் கைவினை திட்டம், நான் முதல்வன் திட்டம் என்று பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

**நான் முதல்வன் திட்டம்**

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நான் முதல்வன் திட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த காலங்களில் முதல் 100 இடங்களில் எந்த மாணவர்களும் தமிழ் நாட்டில் இருக்கக்கூடியவர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆனால், நான் முதல்வன் திட்டத்தை என்றைக்கு நம்முடைய திராவிட மாடல் நாயகர் நடைமுறைப் படுத்தினாரோ, அதற்கு அடுத்த ஆண்டு, 20232024 ஆம் ஆண்டில், முதல் 100 இடங்களில் 7 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் UPSC தேர்வில் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**பத்து ஆண்டுகளில் பட்டா கொடுக்காத அ.தி.மு.க. ஆட்சி**

இந்த சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் ஒரு சிறப்பான Star பணி என்று எதை நான் சொல்ல வேண்டுமென்றால், பட்டாக்களை வழங்கிய பணி. இன்றைக்கு சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான மக்களுக்கு பட்டா பெறுவதற்கு மிகப்பெரிய தடை இருந்தது. இங்கே எனக்கு முன்னால் உரையாற்றிய எதிர்க் கட்சித் தோழர் துணை கொறடா அவர்கள் சொன்னார், வெற்று அறிவிப்புகள் என்று, வீண் விளம்பரங்கள் என்று. பத்து ஆண்டு காலத்தில் ஒரு பட்டாகூட கொடுக்காத ஓர் ஆட்சிதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னே ற்றக் கழக ஆட்சி. ஆனால் இன்றைக்கு எங்களுடைய துணை முதல்வர் தலைமையில் ஒரு குழுவை உருவாக்கி, 1,36,149 பட்டாக்களை ஒரே நேரத்தில் கொடுத்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக, குறிப்பாக என்னுடைய எழும்பூர் தொகுதியில் புல்லாபுரம், சாஸ்திரி நகர், வேம்புலி அம்மன் நகர், மீனம்பாள் சிவ ராஜ் நகர், நடேசன் நகர் ஆகிய பகுதிகளில் இன்றைக்குப் பட்டா பெறப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டாக்களை துணை முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பெற்றவர்கள் எங்களைச் சந்தித்து வாழ்த்திச் செல்கிறார்கள். இது எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரும் பெருமை.

அதுமட்டுமல்ல, விட்டுப்போன பட்டாக்களையெல்லாம்,—எங்கெங்கெல்லாம் ஆட்சேபணையில்லாத அரசு புறம்போக்கு நிலங்கள் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடங்களில் இருக்கிறதோ, அவற்றையெல்லாம் கடந்த பிப்ரவரி மாதம் 21 ஆம் நாள் அரசாணை எண் 97 ன்மூலம் விடுபட்ட இடங்களுக்கெல்லாம் பட்டாக்களை வழங்குகின்ற பணியை மேற்கொள்ள இருக்கிறார்கள். இது சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என்பதால் என்னுடைய தொகுதி குறித்த ஒரு சிறிய கோரிக்கையை இந்த அவையில் நான் வைக்க விரும்பு கிறேன்.

**750 குடும்பங்களுக்கு நிரந்தர குடியிருப்பு!**

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்டலம் 8, வார்டு எண் 99 புரசைவாக்கம், பிரிக்ளின் சாலையில் திடீர் நகர் என்ற ஒரு பகுதி இருக்கிறது. இங்கே 780 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த இடம் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கும், மாநகராட்சிக்கும் சொந்தமானதாகும். எனவே, இந்த இடத்தில் அவர்களுக்கு ஒரு நிரந்தர அடுக்குமாடிக் குடியிருப்பினைக் கட்டித் தர வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாக துணை முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல, இந்த பிரிக்ளின் சாலையில் ஓட்டேரி சுடுகாடு இருக்கிறது. இந்த ஓட்டேரி சுடுகாட்டில் மாபெரும் திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய கல்லறை இருக்கிறது.

**தாத்தா இரட்டை மலை சீனிவாசன் சாலை!** எனவே, இந்த பிரிக்ளின் சாலைக்கு ‘தாத்தா இரட்டைமலை சீனிவாசன் சாலை’ என்று பெயர் வைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள்கூட பாட்டு பாடினார்கள். அந்த பாட்டு இந்த இடத்திற்கு பொருத்தம் இல்லை என்று கூட நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், நான் ஒரு பாட்டு பாடுகிறேன். அந்தப் பாட்டு பொருத்தம் மட்டுமல்ல, தமிழ்நாட்டினுடைய பொருளாதாரக் குறியீட்டையே உயர்த்திக் காட்டிய பாடல்.

**சேத்த பணத்த சிக்கனமா**
**செலவு பண்ண பக்குவமா**
**அம்மா கையில கொடுத்து போடு**
**சின்னக்கண்ணு**
**உங்க அம்மா கையில கொடுத்து போடு**
**சின்னக்கண்ணு**
**அவங்க ஆற நூறு ஆக்குவாங்க**
**செல்லக்கண்ணு**

என்று கவிஞர் மருதகாசி அவர்கள் பாடல் இயற்றினார்கள். நான் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்கள் என்றெல்லாம் சொல்ல மாட்டேன்.

இது சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை; பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமென்றால், எந்தத் திட்டங்களைக் கொடுக்க வேண்டும் என்று யோசித்துப் பார்த்து, சிந்தித்துப் பார்த்து கொடுக்கின்ற ஆட்சி இந்த ஆட்சி. புதுமைப் பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் மூலமாக இன்றைக்கு பெண்கள் தங்களுடைய பொருளாதார மேம்பாட்டை உயர்த்தி இருப்பதன் காரணமாக, இன்றைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டினுடைய *per capita income* 2.68 இலட்சம் இருக்கிறது. ஆனால், இந்தியாவினுடைய *per capita income* சரிசமமாக 1.67 இலட்சம்தான் இது இந்திய சராசரியைவிட 1.64 இலட்சம் உயர்ந்திருக்கிறது. இது பொருளாதாரத்தை வளர்க்கின்ற ஒரு மிகப் பெரிய ஒரு திட்டம். இறுதியாக ஒரு வரியில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை.

இன்றைக்கு நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் அதாவது, எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். வெற்றுத் திட்டம் இன்னும் சில திட்டங்களுக்கெல்லாம் இவர்களெல்லாம் உதவி செய்யவில்லை என்று பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் மாணவர்களை வீட்டிலிருக்கக்கூடியவர்களை வந்து கல்விக் கூடங்களுக்கு படிக்க வேண்டுமென்று கையைப் பிடித்து அழைத்து வந்தார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடையக் கன்னிப் பேச்சில் பள்ளிக்கூடத்திற்கு வரக்கூடிய மாணவர்களை பேருந்திலே ஏற்றி நீங்கள் busல வாங்க பள்ளிக்கூடத்திற்கு என்று சொன்னார்.

ஆனால், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு இந்த நாட்டிலிருக்கக்கூடிய இளைஞர்களை விமானத்திலேற்றி வெளிநாட்டிலே சர்வதேச விளையாட்டுகளுக்கு அனுப்பி வைக்கிறார். இது தான் *sustainable growth* இது தான் வளர்ச்சி. ஆனால், இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 6 மாவட்டங்களை உருவாக்கினேன் என்று பெருமையாக சொல்லுகிற எதிர்க்கட்சி உறுப்பினர், அந்த 6 மாவட்டங்களில் *Sports Development Authority of Tamil Nadu (SDAT)* மூலமாக எத்தனை விளையாட்டு மைதானங்களை இவர்கள் கட்டிக் கொடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு 234 தொகுதிகளுக்கும் ஒரு *mini stadium* என்று உருவாக்கியது மட்டுமல்ல, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளையாட்டை விளை யாட்டாக பார்த்த காலம் போய் விட்டது. ஆனால், இனி விளையாட்டை வாழ்க்கையாக பார்த்து நம்பிக்கையோடு வருகிறார்கள். அதற்கு காரணம், என்னை கைவிட மாட்டார் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் என்று தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் என்று என்று நம்பிக்கையோடு வருகிறார்கள். இன்றைக்கு நினைத்துப் பார்க்க வேண்டும்.

உண்மைக்குப் புறம்பாக பேசுகிறார்கள். ஆனால், அதே சமயத்தில் இன்றைக்கு கோடிக்கணக்கில் சிறப்பு நிதியைத் தருகிற ஒரே ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. இவர்கள் ஜவஹர்லால் நேரு ஸ்டேடியம் பற்றி பேசுகிறார்கள். நேரு ஸ்டேடியத்தில் வவ்வால்கள் பறந்து கொண்டிருந்தன.

**10 ஆண்டுகளில் நேரு ஸ்டேடியத்தின் நிலை!**

நேரு ஸ்டேடியத்தில் 10 ஆண்டுகள் வவ்வால்கள் பறந்து கொண்டிருந்தன. தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் தான், நேரு ஸ்டேடியம் புனரமைக்க ப்பட்டு, தினந்தோறும் *vibrate* ஆக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நேரு ஸ்டேடியத்தை கட்டுவதற்காக அங்கிருந்த மக்களை அப்புறப்படுத்திவிட்டு, 24 ஆண்டுகளாக வீடுகளே கொடுக்காமல் இருந்தார்கள். எங்களுடைய துணை முதலமைச்சர் அவர்கள்தான், அவர்களுக்கும் வீடுகள் கொடுத்து சரித்திரம் படைத்தார்கள். இங்கே வெற்றுச்சொல் வீரர்கள் இங்கே அதிகமாக இருக்கிறார்கள்.

இவ்வாறு இ.பரந்தாமன் உரையாற்றினார்.

### சுயமரியாதைத் திருமணம் குறித்து

# சார்பதிவாளர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் — டாக்டர் நா.எழிலன் கேள்வி!

சென்னை, மார்ச் 28 -

சட்டப்பேரவையில் ஆயிரம் விளக்கு தொகுதி டாக்டர் நா.எழிலன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் பி.மூர்த்தி அளித்த பதிலும் வருமாறு:

**டாக்டர் நா.எழிலன்:** சுயமரியாதை திருமணம் குறித்து சார் பதிவாளர்களுக்கு விழிப்புணர்வு அளிக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் பி.மூர்த்தி:** சுயமரியாதை திருமணம் குறித்து 1955 ஆம் ஆண்டு இந்து திருமண பதிவுச் சட்டத்தின் பிரிவு 7Aல் சேர்க்கப்பட்டு தற்போது வரை அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு, சுயமரியாதை திருமணம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. 2018 ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை 12,114 சுயமரியாதை திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், சுயமரியாதை திருமணம் குறித்து பதிவுத் துறையிலே பயிற்சி நிலையம் மூலமாக பதிவுத் துறையின் அனைத்துப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது .



**டாக்டர் நா. எழிலன்:** திருமணம் என்பது ஒரு மானுட ஒப்பந்தம் என்று சொன்னார் புத்தர். அந்த அடிப்படையில் புரோகித மறுப்பு, சாதி மறுப்பு, சடங்குகள் மறுப்பு என்று இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தியவர் தந்தை பெரியார். 1928 அருப்புக்கோட்டையில் ஒரு சிறிய கிராமத்தில் நடந்த சுயமரியாதை திருமணத்திற்கு, பேரறிஞர் அண்ணா 1968ல் “*Acting in retrospection*” அனைத்து சுயமரியாதை திருமணம், பெரியாரால் நடத்தப்பட்ட அனைத்து சுயமரியாதை திருமணங்களுக்கும் சட்ட அங்கீகாரம் கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா.

இந்த சட்டத்தின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் 2023 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் நிறைவேற்றிய சுயமரியாதை திருமணத்தை பாராட்டி, பெற்றோர்கள் அனுமதி தேவை இல்லை; பொதுவெளியில் திருமணம் நடத்துவதற்கான வழிமுறை தேவை இல்லை; உகந்த சான்றிதழ் கொடுத்தால் திருமணம் செய்ய வேண்டுமென்று பல்வேறு சட்ட முன் நடவடிக்கையைக் கொடுத்த பின்பும் சில சார்பதிவாளர்கள் தங்களுடைய சமூக சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இடர்பாடுகள், சுயமரியாதை திருமணம் நடத்துவதற்கான தடைகள் ஏற்படுகிற சூழல் ஏற்படுகிறது. முக்கியமாக ஆணோ, பெண்ணோ பட்டியல் சமூகத்தை சேர்ந்தவராக இருந்தால் பலவகையான தடைகள் ஏற்படுவதற்கான நிலை ஏற்படுகிறது. இந்த வரலாற்று பிண்ணனியும், சமூக பிண்ணனியும் (மணியடிக்கப்பெற்றது) சார்பதிவாளருக்கு போதிய விழிப்புணர்வு கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன்.

ஏற்கெனவே திருமணம் முடித்தவர்கள், *visa* பிரச்சினைக்கு, வெளிநாட்டிற்கு செல்வதற்கு ஏதுவாக *online* மூலம் திருமண சான்றிதழ் பதிவு செய்ய வழிவகை செய்யப்படுமா என்று மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களை தாங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் பி.மூர்த்தி:** பதிவுத் துறையினுடைய இணையதள பக்கத்தில் உள் சென்று திருமணப் பதிவிற்கு தேவையான அனைத்து விவரங்களையும் பூர்த்தி செய்து அதற்கு உரிய கட்டணத்தை செலுத்திய பின்னர், விண்ணப்பம் உருவாக்கப்படும். அதனை அச்சுப் பிரதி எடுத்து திருமண பதிவிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். பின்னர், இணையதளம் வழியாக பதிவு செய்வதற்கான நாள் மற்றும் நேரத்தினை முன்பதிவு செய்வதற்கான ஒப்புகை*token* பெறலாம். மேலும், பதிவு செய்யப்பட்ட திருமண சான்றிதழில் திருத்தம் தேவைப்படினும் பதிவுத் துறை அலுவலகங்களுக்கு நேரிலே வராமல் இணையம் வழியாகவே விண்ணப்பித்து திருத்திய சான்றிதழைப் பெறும் வசதியும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் நா. எழிலன்:** நிலத்தை வாங்கி விற்கும்போது பல்வேறு *guideline value*க்கும், *market value*க்கும் உள்ள வித்தியாசமும், *market value*க்கும், *guideline value*க்கும் வித்தியாசம் இருப்பதனால் சில பேர் *property*யை விற்க முடியாத நிலை உள்ளது.

அரசாங்கத்திற்கு வரிமூலம் வருவாய் ஈட்டுவதில் தடைகள் இருக்கின்ற சூழ்நிலையும் இருக்கிறது. அரசின்மூலம் இதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.மூர்த்தி:** விவசாய நஞ்சை நிலங்கள், மானாவாரி நிலங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றின் வழிகாட்டு மதிப்பு முரண்பாடுகளைச் சீர்படுத்தும் நோக்கிலும், உண்மையான சொத்து மதிப்பினை பிரதிபலிக்கும் நோக்கிலும், வழிகாட்டு மதிப்புகளை நிர்ணயம் செய்வதற்காக, கழக அரசால் ஓய்வு பெற்ற I.A.S., அதிகாரியின் தலைமையில் ஒரு சிறப்பு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவானது, அவ்விடங்களுக்கு நேரில் சென்று கள ஆய்வு செய்து, வழிகாட்டு மதிப்பினை ஆராய்ந்து, பதிவுத் துறைத் தலைவருக்கு அறிக்கை அளிக்கும். அந்த அறிக்கையானது, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான துணைக் குழு, *sub committee*யால் பரிந்துரைக்கப்பட்ட பின்னர், பதிவுத் துறையின் தலைவர் தலைமையிலான மையக் குழுவின் *General Valuation Committee* ஒப்புதல் பெறப்பட்டு, முரண்பாடுகள் களையப்பட்டு, வழிகாட்டு மதிப்பு சீரமைக்கப்படுகிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ரூ.65 இலட்சம் மதிப்பில் எட்டயபுரத்தில் உள்ள

# பாரதியார் இல்லம் புதுப்பிக்கப்படும்!

## பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தகவல்!

சென்னை, மார்ச் 28 -

சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் கடம்பூர் ராஜு , பாரதியார் இல்லம் குறித்து பேசினார். அப்போது அமைச்சர் மு.பெ.சாமிநாதன் குறுக்கிட்டு பேசியதாவது:-

உறுப்பினர் அவர்கள் எட்டயபுரத்திலுள்ள பாரதியார் இல்லம் பழுதடைந்தது பற்றி குறிப்பிட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே 3 மாதங்களுக்கு முன்பு அங்கு சென்று ஆய்வு செய்தேன். அப்போது அது மிக மோசமாக இருந்தது.

அது பழைய கட்டடம் . 100 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டு, பாரதியார் அவர்கள் பிறந்து, வாழ்ந்த இல்லம். எனவே அதனை புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏறத்தாழ 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தக் கட்டிடம் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. விரைவில் அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.